## சப்பிரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
## வலய கல்விப் பணிமனை – எம்பிலிபிடிய

செயலட்டை

வாரம்- 08

தரம் - 08 கர்நாடக சங்கீதம் 21-25/ஜுன்/2021

### தாலாட்டுப்பாடல்

❖ மனித வாழ்கையின் தொடக்கத்தில் பாடப்படுவது தாலாட்டுப் பாடலாகும். ❖ தால் என்பது நாவைக் குறிக்கும்.

❖ நாவினால் ஓசை எழுப்பிப் குழந்தையை உறங்க வைத்தல் தாலாட்டுப் பாடல் ஆகும்.

❖ தாய் குழந்தையை தம்மடியிலோ, தோளிலோ, தொட்டிலிலோ வைத்து ஆட்டிய வண்ணம் தாலாட்டுப் பாடல்களைப் பாடுவர்.

❖ இப்பாடல்களின் மூலம் குழந்தையின் மீதான அன்பு, மாமன் பெருமை, குழந்தையின் குலப்பெருமை போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன.

❖ ஆராரோ ஆரிவரோ என ஓசை எழுப்புவதன் மூலம் ஆராட்டுதல் எனவும், ஓராரோ ஓராரோ என ஓசை எழுப்புவதன் மூலம் ஓராட்டுதல் எனவும் அழைக்கப்படும்.

❖ இப்பாடலின் ஆரம்பத்திலும் முடிவிலும் ராராரோ ஆராரோ என்ற பதங்கள் பயன்படுத்தப்படும்.

❖ தாலாட்டுப் பாடல் பாடப்படும் இராகங்கள் : நீலாம்பரி, யதுகுலகாம்போஜி, சகானா, ஆனந்தபைரவி

❖ தாலாட்டுப் பாடல்களில் :
1. எளிமையான இசை
2. இலகுவான தாளம்
3. எளிமையான சொற்பிரயோகங்கள்
4. தத்ரூபமான உவமை
5. உருவக அணிகள் கையாளப்படுகின்றன.

❖ தாலாட்டுப் பாடல்களுக்கு உதாரணம் :
- கொவ்வை இதழ் மகளே
- முத்தே பவளமே
- மன்னுபுகழ்க் கோசலை

செயற்பாடு – 1

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. மனித வாழ்கையிள் தொடக்கதில் பாடப்படும் பாடல் எது?
02. தால் என்பதன் பொருல் யாது?
03. தாலாட்டு பாடலின் முலம் எதனை வெளிபடுத்துவர்?
04. தாலட்டுப்பாடல் பாடப்படும் ராகங்கள் எவை?
05. தாலாட்டுப்பாடல்களில் உள்ளடங்கும் அம்சங்கள் எவை?
06. துாலாட்டுப்பாடலுக்கு உதாரணம் தருக.

TEACHER : Mrs.S .DEVAGI (dip.in.edu.music)
SPNCOE

R/EMB/ST.JOHN'S NATIONAL COLLEGE,
RAKWANA